# தீபாவளி 2009 – டென்னசி தமிழ்ச் சங்கம்

டென்னசி தமிழ்ச் சங்கத்தின் வருடாந்திர சிறப்பு நிகழ்ச்சிகளுள் ஒன்றான தீபாவளி நிகழ்ச்சி கடந்த அக்டோபர் மாதம் 31 ம் தேதி மாலை நேஷ்வில் விநாயகர் கோவில் கலை அரங்கத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது. குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைத்து தரப்பினரும் திருப்தியடையும் வகையில் நிர்வாகக்குழுவினர் அமைத்திருந்தனர். மாலை 5.30 மணிக்குத் ஆரம்பித்த கலை நிகழ்ச்சிகள் இரவு 10.30 மணிவரை தொடர்ந்தன.

ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிறப்பாக வரவேண்டுமென கலைக்குழுவைச் சேர்ந்தவர்கள் கடுமையாக உழைத்திருந்தது பார்க்கும்போதே தெரிந்தது. அதனால்தானோ என்னவோ, உழைப்பை அர்ப்பணித்தவர்களுக்கு தானே நன்றி செலுத்த விரும்பிய சங்கத்தின் தலைவர் திரு.செந்தில்நாதன் அவர்கள், மரபைச் சிறிது மாற்றி, தமிழ்த்தாய் வாழ்த்திற்குப்பின், செயலாளர் திரு.கார்த்திக் சந்திரசேகரன் அவர்களை வரவேற்புரைக்கு அனுப்பி வைத்தார். நிகழ்ச்சிக்கு வந்தவர்களையும், சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்த நடிகை ஜெயஸ்ரீ அவர்களையும் பணிவுடன் வரவேற்ற திரு. கார்த்திக் சந்திரசேகரன் அவர்கள் தமிழ் சங்கத்திற்கு ஆதரவளித்துவரும் நல்ல உள்ளங்களை நினைவு கூர்ந்து, அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முதலில் இறைவனைத் துதிக்கும் நடனமும், அதைத் தொடர்ந்து செல்வி.வன்ஷிகாவின் நடனமும் இடம் பெற்றது. எந்த ஒரு சபையாக இருந்தாலும் சின்னஞ்சிறு குழந்தைகளின் நிகழ்ச்சிகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை. பலர் கூடிய ஒரு சபையில் கடுமையான பயிற்சி மேற்கொண்டு அவர்கள் திறமையை வெளிப்படுத்திய முயற்சி மிகவும் பாரட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியது.

அதையடுத்ததாக செல்வி காவியாவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டு வருடங்களுக்கும்முன் இதே மேடையில் தமிழ்ச்சங்க நிகழ்ச்சியில் மழலையாக திருக்குறள் சொன்ன குழந்தையா இது என நமக்கு வியப்பே மேலிட்டது. நல்ல இனிமையாக திரைப்படப்பாடலை கீபோர்டில் வாசித்து கலைநிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தாள்.

தொடர்ந்து வந்தது செல்வன். தீபக் சுப்பிரமணியனின் இசை நிகழ்ச்சி. தீபக்கிற்கும் தமிழ்ச்சங்க மேடை புதிதல்ல. காவியா ஏற்படுத்திய அலைகள் குறையாமல் கீபோர்டிலேயே இசையைத் தொடர்ந்தான். குழந்தைகளுக்கான பாடல்களை சில வருடங்களுக்கு முன் வாசித்த தீபக்கும் பல படிகள் முன்னேறி, ரீதிகௌளை இராகத்தில் அமைந்த பாடலை இந்நிகழ்ச்சிக்காகத் தேர்ந்தெடுத்திருந்தது இனிமையாக இருந்தது.

இசைக்கருவிகளுக்கு ஒரு சிறிய இடைவேளை கொடுக்கவும், பார்வையாளர்களை உற்சாகப்படுத்தவும் அடுத்ததாக மேடையேறியது ஜீட்டு என்கிற ஜிதேந்திரா. பின்னனி இசைக்கோர்வையுடன் இணைந்து உச்ச ஸ்தாயில் பாடி அனைவரது இதயத் துடிப்பையும் சிறிது உயர்த்திய ஜீட்டு, தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் திரு. ராஜ் ஆர்காட்டின் மைந்தன் என்பது உபசெய்தி.

படபடக்கும் பார்வையாளர்களது இதயத்துடிப்பைக் குறையவிடலாமோ? கணநேர இடைவெளிகூட கொடுக்காமல் மேடையை ஆக்கிரமித்தவர்கள் திரு. நாகராஜனின் புதல்வர்கள் குகாவும், பீமாவும். தம்பியுடையான் படைக்கஞ்சான் என்பதற்கேற்ப தனது சகோதரன் பீமா தாள வாத்தியத்தில் (ட்ரம்ஸ்) கைகொடுக்க, நரம்பு வாத்தியத்தை (கிடார்) இசைக்க ஆரம்பித்தார் குகா. பொதுவான நம் கலாச்சார இசையை எதிர்பார்த்துக் காத்திருந்த பார்வையாளர்ளின் நம்பிக்கையை பொய்யாக்கிய சகோதரர்கள் இம்முறை எடுத்துக்கொண்டது மேற்கத்திய 'ராக்' பாடலை. பின்னி எடுத்துவிட்டார்கள் இருவரும்.

குழந்தைகள் தனித்தனியாக தங்கள் திறமைகளை காண்பித்தது போதும், இப்போது சிறுவர்கள் இணைந்து கலக்க வேண்டிய நேரம். விக்னேஷ் பாலசுந்தரம், விக்னேஷ் குமார், அபிநவ் ராஜ் மற்றும் விசு செந்தில்நாதன் ஆகியோர் இணைந்து ஆடினார்கள். மிகவும் பிரபலமான 'ஜெய்கோ' பாடலுக்கு நேர்த்தியுடன் நடனத்தை அமைத்தவர் திருமதி. வித்யா பாலசுந்தரம். மிகவும் முற்போக்கு சிந்தனைகளுடன், புதிய யுத்திகளைக் கையாண்டு நடனங்களை அமைப்பதில் தேர்ந்தவர் வித்யா என்பது நேஷ்வில் அன்பர்களுக்கு நன்கு தெரிந்த ஒரு தகவல்தான்.

சரி. பெண் குழந்தைகள் என்ன சளைத்தவர்களா? சென்ற நடனத்திற்கு இணையாக ஆடி அதிகமான கைதட்டலை வாங்கிச்சென்றார்கள் செல்வி ரம்யா குமாரும், நவீனாவும்.

அடடா! இன்று அமெரிக்காவில் மிக முக்கிய தினமாயிற்றே! ஹாலோவின்(Halloween) தினம். அது சம்பந்தமாக ஒரு நிகழ்ச்சி கூட இல்லாமலா? திருமதி. அருணா கார்த்திக் குழந்தைகளுக்கான மாறுவேட அணிவகுப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். ஆகா! எத்தனை குழந்தைகள், எத்தனைவித வேடங்கள். பார்வையாளர்களுக்கு நல்ல விருந்தாக அமைந்தது இந்நிகழ்ச்சி. திரு. இரமேஷ் இராமலிங்கம் ஒவ்வொரு வேடத்திற்கும் மிகப் பொருத்தமாக பின்னனி இசையை தேர்ந்தெடுத்திருந்தது மிக அருமையாக இருந்தது.

இப்படித் திகட்டத்  திகட்ட குழந்தைகள் தங்களது திறமைகளைக் காண்பித்தபிறகு, பெரியோர்களுக்கான நிகழ்ச்சிகள் ஆரம்பித்தன. நிகழ்ச்சியின் மிக முக்கிய அம்சமான, தீப ஒளித்திருநாளை ஒட்டி  'திரு விளக்கு நடனம்' என்ற பெண்கள் குழுவினரது நடனம் உண்மையில் தெய்வீகமாக இருந்தது. கண்கவர் மகளிரோ, கார்த்திகை பெண்டீரோ, கற்பனைக்கும் எட்டாத தேவியரோ என்று பார்த்தவர்கள் அனைவரையும் பல நிமிடங்களுக்கு மெய் மறக்கச் செய்து விட்டார்கள். இந்த நடனத்திற்காக அவர்கள் தேர்ந்தெடுத்த இசை வடிவமும் மிகவும் சிறப்பாக இருந்தது. நடனத்தின் முடிவில் எழுந்த பலத்த கரகோஷமே நிகழ்ச்சியின் தரத்திற்கு சான்று.

பல நிகழ்ச்சிகள் நடந்தாலும், நமது பரத நாட்டியம் இல்லாமல் நடன நிகழ்ச்சிகள் இருக்கலாமோ? செல்வி. நிவேதா சந்திரமோகன் மீண்டும் ஒரு முறை தமிழ்ச் சங்க மேடையை தனது பரதக்கலை மூலம் பெருமைப்படுத்தினார்.

இசையும் நாட்டியமும் முற்றுப்பெற, உரையாடல் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. நாடக நிகழ்ச்சிகள் தமிழ்ச் சங்க மேடைக்கு இது புதிதல்ல என்றாலும், சில வருட இடைவேளைக்குப் பிறகு நண்பர்கள் முயற்சியெடுத்து இதை நடத்தியதை பலர் வரவேற்றது கண்கூடாகத் தெரிந்தது. திருமதி. நந்தினி கம்பி அவர்களின் தொலைபேசி உரையாடலை மையமாக வைத்த 'கலைமகள் டி.வி' நாடகமும் அதைத்

தொடர்ந்து திரு. ராஜேஷ் கண்ணனின் 'பல்லானது பலானது' நகைச்சுவை நாடகமும் மிக நன்றாக அமைக்கப் பட்டிருந்தன.

அடுத்ததாக  நடிகை ஜெயஸ்ரீ அவர்கள் நடத்திய 'ஜோடிப் பொருத்தம்' நிகழ்ச்சி நடைபெற்றது. பிரபலமான தொலைக்காட்சி அலைவரிசையில் இந்த நிகழ்ச்சியை மிகத் திறம்பட நடத்தியவரென்பதால், மிக அழகாக நிகழ்ச்சியை நடத்திச்சென்றார் ஜெயஸ்ரீ. இதில் கலந்து கொண்ட தம்பதியினர் அனைவரையும் ஆச்சரியப்படுத்தினர். ஏழு ஜோடிகள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி ஆடலும் பாடலுமாகச் சென்றது. இறுதியில் யார் வெற்றிபெற்றார் என்பதைவிட, இப்படிப்பட்ட போட்டிகளைத் திறமையாக நடத்தி ஒரு விழாவில் பார்வையாளர்களைத் திருப்திப்படுத்த முடியும் என்பதை நிரூபித்த தமிழ்ச் சங்க நிர்வாகக் குழுவிற்கு எங்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வட அமெரிக்காவில் பல ஆண்டுகளாக மேடைகளில் தனது இசைக்குழுவினருடன் பாடிவரும் திரு. C.S.ஐங்கரன் அவர்களும் இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அது மட்டுமல்லாது நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க இரவு மெல்லிசை நிகழ்ச்சியில் நடிகை ஜெயஸ்ரீயுடன் இணைந்து இரண்டு பாடல்களையும் பாடி அசத்தினார். அவரது குரல் வளமும், இசை ஞானமும் நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

வெகுநேரம் நிகழ்ச்சிகளையே பார்த்துக்கொண்டிருக்கிறோமே, யாருக்கும் பசியெடுக்கவில்லையா? அப்படித் தெரியவில்லையே. பார்வையாளர்களும், குழந்தைகளும் உற்சாகமாகவே கடந்த சிலமணி நேரங்களாக இருக்கின்றனரே. இந்த அதிசயத்தை நடத்திக் காட்டியவர்கள் திரு. நாராயணன் பழநியப்பன் தலைமையிலான அணியினரே. சற்றும் நெருடலை ஏற்படுத்தாமல் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை, ஒரு சிறு சலசலபின்றி அனைவருக்கும் தேவையானபோது உணவளித்து, நிகழ்ச்சியின் போக்கை மாறாமல் வைத்திருந்தனர். அவர்களுக்கும் நமது பாராட்டுக்களை உரித்தாக்குவோம்.

விழாவின் ஆரம்பத்தில் ஒரு சில நிகழ்ச்சிகளில் ஒலிச் சாதனங்கள் சரிவர கையாளப்படவில்லை என்பது ஒரு சிறு குறை. அடுத்து வரும் நிகழ்ச்சிகளில் அதில் சற்று அதிகம் கவனம் செலுத்தப்படவேண்டுமென்பது நமது வேண்டுகோள்.

நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தித் தந்த அனைவருக்கும் நன்றி செலுத்திய சங்கத் தலைவர் திரு.செந்தில்நாதன் அவர்கள், நிகழ்ச்சிக்கு பொருளாதார உதவி செய்த நிறுவனங்களையும நினைவு கூர்ந்தார்.  நிகழ்ச்சிகளை இனிதே முடிக்க, இறுதியில் மேடையை துணைத்தலைவர் திரு. ராஜ் ஆர்காட் அணியினரிடம் விட, பல மெல்லிசைப் பாடல்களுடன் ஒரு நல்ல விழா இனிதே நடந்து முடிந்தது.

- அருணாசலம்